Advocate

08.04.2026
OS. No.467/2023
**வா.சா.1 –** திரு.ராஜா, த/பெ.திரு.திருநாவுக்கரசு

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :-**

நான் முதுகலை அறிவியல் பட்டப்படிப்பு படித்திருக்கிறேன். முனைவர் பட்டமும் பெற்றிருக்கிறேன். நான் தனியார் பொறியியல் கல்லூரியில் பேராசிரியராக பணியில் இருக்கிறேன். என் மனைவி திருமணம் ஆகி என் வீட்டிற்கு வந்தவுடன் என் தந்தை வீட்டில் இருந்தவரை வேலைக்கு சென்று வந்தார். தற்போது குழந்தை பிறந்த காரணத்தினால் வேலைக்கு செல்லவில்லை. எனது மனைவி தனியார் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றினார். எனது திருமணம் 2013 ஆம் வருடம் நடைபெற்றது. 2014ஆம் வருடம் குழந்தை பிறந்ததை காரணம் காட்டி என்னை தனிக்குடித்தனம் செல்ல வைத்தார்கள். என் குழந்தை பிறந்தது தான் என் தாயாரின் இறப்பிற்கு காரணம் என்று தெரிவித்து என்னை வீட்டை விட்டு வெளியே அனுப்பி விட்டார்கள். எனது மனைவியின் தூண்டுதலின் பேரில் 2014 ஆம் வருடத்தில் இருந்து சொத்தை பிரித்து கேட்டு நான் தான் பிரச்சனை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. என் தாயார் 2014 ஆம் வருடம் காலமாகிவிட்டார். நானும் எனது மனைவியும் சொத்தை பிரித்து கேட்டு துன்புறுத்தல் செய்த காரணத்தினால் என் தாயார் இறந்து போனார் என்றால் சரியல்ல. அவருக்கு சிறுநீரக கோளாறு இருந்ததால் அதன் காரணமாகத்தான் இறந்து போனார். நான் 2014 ஆம் வருடத்தில் இருந்து

Adocwo

தனிக்குடித்தனமாக வாழ்ந்து வருகிறேன் என்றால் என் தாயார் இறந்த பிறகு ஒரு வருட காலம் என் தகப்பனாருடன் வசித்து வந்தேன். 2015 ஆம் வருடம் செப்டம்பர் மாதத்தில் தான் என்னை வீட்டை விட்டு வெளியே செல்ல சொன்னதால் வெளியேறினேன். என் தகப்பனார் என்னை போகச் சொல்லவில்லை என்றும் நானாகத்தான் சென்றேன் என்றால் சரியல்ல. எனது இரண்டு தம்பிகளும் என் அப்பாவுடன் தான் வசித்து வருகிறார்களா என்றால் வசித்து வருகிறார்கள். மூன்றாவது தம்பியின் மனைவி அவருடன் சேர்ந்து வாழ இயலாது என்று விவாகரத்து பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்து இருக்கிறார். விவாகரத்து பரிகாரம் கேட்டு யார் வழக்கை தாக்கல் செய்து இருக்கிறார் என்றால் இருதரப்புக்கும் இடையில் வழக்கு நடைபெறுகிறது. அந்த வழக்கு நடைபெற்ற விவரத்தை கேள்விப்பட்டேன். நான் சொல்வது போல் எந்த ஒரு வழக்கும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய படிப்பு செலவு அனைத்திற்கும் என் தகப்பனார் பல லட்சம் செலவு செய்தார் என்றால் சரியல்ல. நான் அரசு பள்ளியில் தான் படித்தேன். முனைவர் பட்ட படிப்புக்கு என்னுடைய சொந்த செலவில் தான் படித்தேன். என்னுடைய திருமணத்திற்கு என் தகப்பனார் பல லட்சம் செலவு செய்தார் என்றால் இல்லை. எளிமையாக தான் திருமணத்தை நடத்தி வைத்தார். வீட்டின் அருகில் உள்ள சின்ன மண்டபத்தில் வைத்து தான் அனைவருக்கும் திருமணம் நடைபெற்றது. என் தகப்பனார் தலைமை ஆசிரியராக பணியாற்றி பணி நிறைவு பெற்றவர் என்றால் சரிதான். என் தகப்பனார் 2001 ஆம் வருடம் மே மாதத்தில் பணி நிறைவு பெற்றார். என்

தகப்பனார் பணிக்காலத்தில் அங்கங்கே சொத்துக்கள் வாங்கி வந்தார் என்றால் நாங்கள் அனைவரும் வேலைக்கு சென்ற பிறகு என் மனைவி உட்பட அனைவரது வருமானத்தையும் அவரிடம் கொடுத்ததை வைத்து தான் சொத்துக்கள் வாங்கினார். என் தகப்பனார் வாங்கிய ஒரே ஒரு சொத்தும் எங்கள் அனைவரது வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது ஆகும். மற்றவை அனைத்தும் என் தாத்தா வாங்கிய சொத்துக்கள் ஆகும். நான் சொத்துக்கள் வாங்கியதற்கு எந்த ஒரு பங்களிப்பும் செய்யவில்லை என்றும் ஒரு ரூபாய் கூட சொத்துக்கள் வாங்கியதற்கு நான் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் என் தகப்பனாருக்கு தனிப்பட்ட முறையில் பட்டா ஏற்பட்டு அவரால் அனுபவம் செய்து வரப்படும் சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. சில சொத்துக்கள் அவரால்சுயமாக வாங்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. அவரால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களில் நான் பாகப்பிரிவினை கோருவதற்கு எனக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு யார் தகவல் சொன்னார் என்றால் நான் தான் சொன்னேன். வழக்கு தாக்கல் செய்தபோது அதில் சொல்லப்பட்ட சங்கதிகளை படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கில் சொல்லப்பட்ட சில சொத்துக்கள் என் தாத்தாவிற்கு சொந்தமான சொத்துக்கள் என்று சொல்லி இருக்கிறேன். என் தாத்தாவின் வாரிசாக என் அத்தை ஆதிலட்சுமி இருக்கிறார் என்றால் வாரிசு சான்றில் என் அப்பா பெயர் மட்டும்தான் உள்ளது. என் அப்பா உடன் பிறந்த சகோதரி

Vaccc

ஆதிலட்சுமி என்பது எனக்கு தெரியும். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரை சங்கதிகளை படித்துப் பார்த்து தெரிந்து கொண்டேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையானது என்றால் அவை உண்மைக்கு புறம்பானது ஆகும். எதிர்வழக்குரையில் ஆதிலட்சுமி அவசிய தரப்பினர் என்று குறிப்பிட்ட பிறகு அவரை வழக்கில் தரப்பினராக சேர்த்தேன் என்றால் சரிதான். என் தகப்பனார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வருகிறார் என்றால் அவர் எந்த காலத்திலும் காய்ச்சல் தலைவலி என்று கூட மருத்துவமனைக்கு சென்றது கிடையாது. என் தகப்பனார் 1943 ஆம் வருடம் பிறந்தவர் ஆவார். அவருக்கு தற்போது 83 வயது இருக்கும். அவரது வயது முதிர்வு காரணமாக பல வருட காலமாக மருத்துவ சிகிச்சை எடுத்து வருகிறார் என்றும் மற்ற சகோதரர்கள் தான் அவரை பராமரித்து வருகிறார்கள் என்றும் நான் அவரை பராமரித்து வரவில்லை என்றால் சரியல்ல. நான் அவரை பராமரித்து வராத காரணத்தினால் தான் அவர் மருத்துவ சிகிச்சை எடுத்து வரக்கூடிய விபரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞரின் வேண்டுகோளின் அடிப்படையில் ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.